உ

சிவமயம்.

தமிழன்

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்"
'எண்ணித்துணிக கருமம்'
"எவ்வ துறைவ துலக முலகத்தொ-
டவ்வ துறைவ தறிவு."

C. N. அனந்தராமைய சாஸ்திரி M. A., பண்டிதர் S. முத்துசுவாமிப் பிள்ளை, பத்திராசிரியர்கள்.

தொகுதி V. } 1093 புரட்டாசி, திருவனந்தபுரம்: OCTOBER 1917. { பகுதி 8.

பொருள் அடக்கம்.

	விஷயம்.	பக்கம்.
1.	முற்கூற்றுகள்	142
2.	தென்னிந்தியவிவசாயத்தின்தற்காலநிலைமை	144
3.	சந்திரகுப்தசக்கிரவர்த்தி சரித்திரம்	146
4.	The Date of Chilappatikaram...	147
5.	தொகைநூல் வரலாறு ...	150
6.	The presence of death ...	155
7.	Temptation ...	155
8.	ஆங்கிலக் கல்வியின் நிலைமையும் விலையும்	155
9.	காந்தமும் மின்சாரமும் ...	159

சந்தா விவரம்.

இந்தியா, இலங்கை, இரங்கூன்	ரூ.	2
வெளிநாடுகளுக்கு	ரூ.	3

குறிப்பு:—சந்தாத்தொகை எப்பொழுதும் முன்னதாகவே செலுத்தப்படவேண்டும்.

THE "TAMILIAN"

A Monthly Anglo—Tamil Journal.

FOR

the Educated and the Masses, Women and Children.
Annual Subscription Rs. 2
Strictly payable in advance.
SHORT STORIES: a speciality.

The best Medium for advertisement.

Advertisement rates per month.

Full page or 2 columns	Rs.	5—0—0
Half page or 1 column	,,	3—0—0
Quarter page or ½ column	,,	2—0—0

Contract rates on application.

All literary communications, books for review etc, should be addressed to Mr. C. N. Ananta Ramaiya Sastri M. A. Editor, The "Tamilian," Trivandrum; all orders, remittances, advertisements etc., to

Messrs. NAGASUBRAHMANYA RAO BROS.,

Publishers, Trivandrum.

மங்களம்.

ஜயார்ஜூப மங்களம் மஹாப்ரபாவ மங்களம்
ஜய ப்ரசஸ்த மங்களம் மனோஜ்ஞதேஹ மங்களம்
உதாரசீல மங்களம் ப்ரசாந்தசித்த மங்களம்
ஸதாரபுத்ர பாந்தவம் ஜயாகிலேச்வராஜ்ஞயா.

			ஞ்சி	ச			
		வ	ம்யா	க்ரு	ஸ		
	ய	ர	ய	து	தே	த	
ஜ	ய	ஜ	ய	ஜ	ய	ஜ	ய
	ஜ	ரம்	ஞம்	தாம்	மி	ய	
		ஸி	பா	வ	நாம்		
			ங்கு	ர:			

SOUVENIR

OF THE

SHASTIPURTI

All about Travancore

WITH

64 ILLUSTRATIONS

Price Re 1 only

Apply to

T. NAGASUBRAMANYA ROW BROS.

TRIVANDRUM.

ஷஷ்டிபூர்த்தி மங்கள வாழ்த்து.

வாழி வாழிய வஞ்சியர் கோமான்
ஆழி நாதன்ற னன்பனும் வாழியே.

நேரிசை யாசிரிப்பா.

சுந்தரன் றன்னுடன் சிந்தா மிவர்ந்து
கயிலையங் கிரியினில் சங்கரன் றன்பால்
நல்லருள் பெற்ற நலந்திகழ் மேலோன்
சேரமான் பெருமான் செழுங் குலத்துதித்தோன்
செஞ்சுவை மொழியோன் வஞ்சி பூபாலன்
திருவளர் மார்பனருள் பெறுந் தாசன்
பரிஜனமுதிதன் வெகுஜன நாதன்,
தராதல மேத்துந் தாவில் வளஞ்சேர்
திருவிதாங் கூரெனுந் திப்பியப்பெயருடை
இராச்சிய மதனைவாய்த் தறநெறியே
அனந்தபுரமெனு மாசமா நகரில்
அரசு வீற்றிருந்து அருளோடு புரக்க
பன்மதத்தவரும் பல் சபையோரும்
நச்சி மெச்சி உச்சி வைத்திடும்
திருமூலர் திருநாளெனப் பெயரிய
நற்குண சீலன் நந்தம் மிறைவன்
சஷ்டியப்த பூர்த்தியாந் திருநாள்
கொல்லமாண் டோராயிரத்தின் மேல்
ஒன்பான் பத்தொடு மூன்றாண்டதனில்
மந்திர விதியால் தந்திர முறையில்
அமைவுற நடைபெறு மதிசயங் கண்டு
வானவர் மகிழ்ந்தனர் மாதவர் புகழ்ந்தனர்,
நின் குலஞ் சிறக்க, சிறக்க நின்னுயுள்—பெரும,
புணரியலைக்குங் குமரி
யெக் கரிட்டமணலினும் பலவே.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

நிரந்தரமடியார் தங்கள் நினைப்பெலா முணரா நின்று
வருந்துறுமயன் மனத்தர்மருளற வருளித்தேற்றி
பொருந்துறு நலங்களெல்லா' பொற் புறவமையச் செய்யும்
விரந்தரு மாலே காக்கவஞ்சியர் கோமான்றன்னை.

S. கிருஷ்ணசுவாமி அய்யர்

மாதுஸ்ரீ அனிபெஸண்ட் அம்மையவர்கட்கு எழுபதாவதுவயது நிறைந்ததைப்பற்றி திருவனந்தபுரம், மகாராஜா காலேஜ் தமிழ் பண்டிதர் ஸ்ரீமான் S. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள் இயற்றிய

மங்களவாழ்த்து

எண்சீர் ஆசிரியவிருத்தம்.

தெரியார்க்குந் தெரிந்தவர்க்குந் தெரிவுறுத்தும் பிரம,
ஞானசபை நாயகமே ஞாதவிய மறிந்தோய்,
பரிந்து அன்பர் பருவரலை பறித்தொழிக்கமுயன்றே
பொறைக்கயிற்றில் புகழுசைக்கும் பெருந்தகைமைக் [குன்றே
அரிமருகனருளுடைய அகத்தியனாதி
தூயோரின் றுணைவலியாற் றுன்பனைத்துந் துடைத்தே
புரிவுடையார் மனத்தகத்தே புகுந்துலவும அன்னே
எழுபத்தாம்ஆண்டடைந்தோய் இனிதுவாழ்ந்தருளே

நிலைமண்டிலவாசிரியப்பா

முழங்குமுந்நீர் முழுவதும்வளை இப்
பாரந்து பட்டவியன் ஞாலத்து
மன்பதை செய்யும் மாதவமதனால்
வாரிஜமலர்போல் மலர்ந்தவதனமும்
கருணையலைபெறிந்தொழுகுங் கண்ணும்
பரிவொடுமுகிழுமுறுவலும் பால்போல
நரைதருதலையும் புரையறுமொழியும்
மலைமகள்கருணையுங் கலைமகளுரைவுங்
கமலையினுக்குமமைய வோருருவாய்
அவனிதலத்திலவதரித்தருளிய
அன்புருவாய்த்த அனிவஸன் றம்மே!
கடல்மடைவிண்டெனக்க அழுறுமமுரையால்
இரும்புங்காந்தமும் பொருந்துநதன்மைபோல்
யாவா சிந்தையுமிசைந்து நட்புறும்
தமக்கெனமுயலாத்தாவில்தகைமையும்
பிறர்க்கெனவுழைக்கும்பெறலருங்குணமுளோய்
அடியார்துன்பினையடியோடழிக்கும்
அருளுருவாயவறவோருடனல்
அறுபதும் பத்தும் ஆண்டுகளடைந்தனை
சிறக்கநும்மாயுள், முயற்சியுஞ்சிறக்கவே.

இத்துலாத் திருமூலம்.

மன்னர் பெருமான் ஷஷ்டிபூர்த்தி நிகழத்தொடரும்
அன்னதுலை மூலதினமே—இன்னருளால்
எவ்வளவு சன்மகாளிப்பால் நிகழ்ந்ததோ
லவ்வளவு மேலும் நிகழ்க.

வித்தியாரம்பம்.

சங்கராசாரியன் காலடி வணங்கியே
தங்கக்குடம் நமதிளங்கோ—பங்கமற
வித்தியை பயின்றுவர வாரம்பமாகவே
காத்திடுவரோ குமரரே.

தமிழ்.

புகையென்ன புகழென்ன *தமிழென்ன விம்மூன்றும்
புகல்கின்றவே தமிழின் கோர்வை—புகைதன்னில்
ஐ விகுதி யம்புகழி லிழ்தமிழிற்கீண்; தமதே
யாவது தம்பாஷையெனவே.

Mr. K. Appukuttan Eradi M. A.

எருடி பின்னனைய மேனிமனமானமுடன்
சீராத்து வாழ்ந்தேயிப் பேர்நகரிற்—போர்த்து
கார்வண்ண வள்ளவிடு சேர்ந்தானை செவற்குப்
பார்வண்ணங் கண்ணியமோ தான்?

C. N. A.

தென்னிந்தியா விவசாயத்தின் தற்கால நிலைமை.

ஒன்றும 'உழுதுண்டு வாழ்வதிற் கொப்பில்லை' யென்றும் மற்றப்பணிகளுக்கெல்லாம் பழுதுண்டென்றும் வேளாண்மைக்கோ அழிவில்லையென்றும்' நம்முன்னோர்கள் கூறியுள்ளது. உண்மையோவென யோசிக்க இடங் கொடுத்து விட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில்கூட கமகத்தொழில் கிரிஷிகர்களுக்கு அதிக லாபத்தைத் தந்தும் அதிக கடனை அவர்களுக்கு உண்டு பண்ணுமலிருந்ததாகவும் அநேகர் சொல்வது உண்மையே. அங்ஙனமாயின் தற்போதைய விவசாயிகளுக்கு இவ்வளவுகடன் வருவானேன் என் அநேகர் கமகத்தொழிலை முடியாதென்று கைவிட்டுப் பட்டணங்களில் போய் வேறுவிதமான ஜீவனம் செய்ய எண்ணுகிறார்கள். நம் நாட்டில் மாத்திரம் ஏன் பஞ்சம் அடிக்கடி சஞ்சரிக்கவேண்டும்?

இவைகளெல்லாவற்றிற்கும் காரணம் நம் கிருஷிகர்கள் தொன்றுதொட்டு வழங்கிவரும் பழய ஆனுகரிகமாயுள்ள லாபத்தைத் தாராத விவசாய முறைகளை அநுசரித்துவருவதுதானென்று அநேக நிபுணர்கள் சாதிக்கின்றனர். தற்காலத்தில் கையாடப்பட்டு வரும் விவசாய முறைகள் நாளடைவில் விவசாய சாஸ்திரத்தை ஓட்டினவைகளல்ல வென்றே சொல்லவும் வேண்டும்.

எந்த தான்யத்தின் விளைவைக் கவனித்தாலும் மற்ற ஐரோப்பிய அமெரிக்கா நாடுகளைக்காட்டிலும் இந்தியாவில் ஒரு ஏக்கராவின் சராசரிவிளைவு மிகவும் குறைந்திருக்கின்றதென்று நன்கு புலப்படுகிறது. இங்கே ஏக்காவின் சராசரி நெல்விளைவு 2,500 பவுண்டிற்கு மேலில்லை. (1 பட்டணம் படி இரண்டரை பவுண்டு) ஸ்பெயின இட்டலி முதலான ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலிருக்கும் ஐக்கியநாட்டிலும் நம்முடைய நெருங்கிய சிநேகிதர்களாகிய ஜப்பானியா நாட்டிலும் ஒரு வக்கராவின் சராசரி மாசூல் 10 0[illegible] பவுண்டு நெல்லுக்குக் குறைந்ததில்லையென்று ஏற்படுகிறது எவ்வளவு வித்தியாசம். இதைப்போலவே கோதுமையும் இன்னும் மற்று முண்டான பல வகை விளை பொருள்களின் விளைச்சலும் மாசூலும் இருக்கின்றன. கொஞ்ச காலத்திற்கு முன் நிலங்களெல்லாம் அதிக பலனைத் தந்ததென்றும் நம் வீட்டிலுள்ள பெரியோர்கள் சொல்லுவதை யாவரும் கேட்டிருக்கலாம். இதிலிருந்து இங்கிருக்கும் நிலங்களின் செழுமை, சாஸ்திரத்தைத் தழுவி விவசாய முறைகளை அநுஷ்டிக்காததினாலும் விவசாயிகளின் கவனக் குறைவினாலும், குன்றிவிட்டதென்று கட்டாயமாய் சொல்லவும் வேண்டும். ஒரு தேசத்தின் முக்கியமான விளை பொருள்களை அப்படியே மற்ற தேசங்களுக்கு ஏற்றுமதி செய்தனுப்பிவிட்டு, இவ்விளைவையீன்ற நிலங்களுக்கு அவைகள் எவ்வளவு பலனைக் கொடுத்ததோ அவ்வளவு பரிமாணமாவது பயிருணவு எருவாக இட்டாலல்லவோ நிலவளம் க்ஷீணிக்க இடமிராது. நாம் பருத்திக்கொட்டை, மணிலா, முத்துக்கொட்டை முதலான எண்ணெய் வித்துக்களை அப்படியே அன்னிய தேசத்திற்கு ஏற்றுமதி செய்வதானது நிலங்களையும் அவைகளின் செழுமையையும் அயல் நாட்டிற்கு அப்படியே ஏற்றி அனுப்புவதற்கு சமானமென்று விவசாய நிபுணராக விளங்கின டாக்டர்போல்கர் இந்தியாவிற்கு வந்தபொழுது சொல்லி வியசனித்தார். இங்கேயே நம்முடைய எண்ணெய் வித்துக்களை ஆட்டி பிண்ணாக்கை இங்கேயேவைத்துக்கொண்டு எண்ணெயை மாத்திரம் அயல் நாடுகளுக்கு அனுப்பாதது விசனிக்கத்தக்கதே. நிலத்தின் வளம் க்ஷீணிப்பதற்கு இது ஒரு முக்கியமான காரணம்.

படிப்பின்மையும், மூலதனக் குறைவும் விவசாய சங்கதிகளில் தேர்ந்த அபிப்பிராயமும் உதவியும் கொடுக்க வல்லவர்கள் முன்னுவில் இல்லாமையே தற்போதிருக்கும் ஈன விவசாயஸ்திதிக்கும் காரணங்களெனலாம். இந்தப் பட்டத்தில் இன்ன விதைக்கவேண்டுமென்றும் விதைகள் எப்படிப் பொறுக்கவேண்டுமென்றும் இன்னின்ன உரங்கள் பயிர்களுக்கிட்டால் அதிக மாசூல் கொடுக்குமென்றும் சொல்லவும் ஆடு மாடுகளின் வம்சவிருத்தி செய்ய அநுஷ்டிக்கவேண்டிய விதிகளையும் கிருஷிகர்களுக்கு வேண்டும்போது போதிக்கவும் யாதொரு விவசாய நிபுணர்களாவது இருந்ததாக ஏற்படவில்லை. [தொடரும்]

இந்துநேசன்

A University for Travancore.

சங்கராசாரியன் 'காலடி' முதற்குலகு
தாங்கும் 'தலை'க் குமரியிறுய்ப்—பொங்குவது
நாமின்று காண்கிறோம் சர்வக்கலாசாலை
யாமென்ற செய்தி பரவ.

C. N. A.

சந்திரகுப்த சக்ரவர்த்தி சரித்திரம்.

ஸ்ரீமாந் வ. வே. சுப்ரமண்ய அய்யரவர்கள்.

[129-வது பக்கத் தொடர்ச்சி]

வியாபாரக் கப்பல்களெல்லாம் பிரயாண யோக்கியமாக இருக்கின்றனவா என்றும், துறைமுகங்களும் இறங்கு மேடைகளும் பத்திரமாக இருக்கின்றனவா என்றும், கப்பல்களையும்படகுகளையும் நடத்தஅவசியமாக வேண்டிய மீகாமர் அந்தந்தக் கப்பல்களிலும் படகுகளிலும் ஏறியிருக்கின்றார்களா என்றும், பார்த்துக்கொள்ள ஒவ்வோர் துறைமுகத்திலும் ஓர்கார்பாரியும் அனேக வினையாளிகளும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். தண்ணீரில் மனித உயிருக்கு அபாயம் நேராதபடி காப்பதுதான் காரபாரியின் முதல் கடமையாக இருந்தது. தன் சரகத்துக்குள் எங்கேயாவது கப்பல் உடைந்து போய்விட்டால் அவன் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு வரவும, உடைந்த கப்பலை சாத்தியமானால் இழுத்துக் கொண்டு வரவும், வேறுகப்பல்கள் அனுப்ப வேண்டும். உடைந்த கப்பல் எந்த ஜாதியாருடையதாக இருந்தாலும் அதை மராமத்துப்பார்க்கத் துறைமுகங்களில சகலவிதமான வசதிகளும் அவன் கொடுக்க வேண்டும என்றும் சட்டம் இருந்தது.

இன்னம் ஒரு ஏற்பாட்டிலிருந்து சந்திரகுப்தன் அரசியலில் அரசனுடைய கடமைகளைப்பற்றி என்ன அபிப்பிராயம இருந்தது என்று நன்கு விளங்குகிறது அந்த ஏற்பாடு என்னவென்றால், களவு போய்விட்ட சொத்துக்களை அரசாங்மானது உடையவனுக்கு மீட்டுக்கொடுக்க வேண்டுமெனபதே. குடிகளை இதர மனிதர்களால் தீங்கில்லாமல் காப்பாற்றுவதற்காகத்தான் அரசன் ஏற்பட்டிருக்கிறபடியாலும், அவனுக்கு ஜனங்கள் இறை செலுத்துவதும் அதுகாரணம் பற்றியேதானகலாலும், களவுபோன சாமான்களைக் கண்டுபிடித்துத் தரவேண்டியதும், அவை அகப்படாமற்போனால் அவற்றின் கிரயத்தை இழந்து போனவனுக்கு ஈடு செய்துகொடுப்பதும் ராஜாங்கத்தின் கடமையாக நினைக்கப்பட்டது. அதற்காகவே ஒவ்வொரு ஸ்தலத்துக்கும் தலையாரிகளும் காவற்காரரும் போதுமான சம்பளத்தில் நியமிக்கப்பட்டிருந்தார்கள். களவுகளைக் கண்டுபிடிக்காவிட்டால் அவர்களிடமே நஷ்டம் வாங்கப்படுமென்றும, வேலையில அசிரத்தையாவது அஜாக்கிரதையாவது கள்வர்களுக்கு உடந்தையாயாவது இருந்தால் அவர்கள் தண்டிக்கப்படுவதோடு வேலையினின்றும்கூட நீக்கப்படுவார்களென்றும், ராஜாங்கமானது விதிஏற்படுத்தி இருந்தபடியால் தலையாரிகளும காவற்காரரும் தங்களுடைய வேலையைக்கருத்துடன் பார்த்து வந்தார்கள். தவிர இந்த உத்தியோகங்கள் பரம்பரை பாத்தியமாக அதே குடும்பங்களிலேயே விட்டுவைக்கப்பட்டு வந்தமையால் தலையாரி முதலியவர்களும் சிறுவயது முதலே அனுபோகம் பெற்று எப்பொழுதும் தங்கள் தங்கள் வேலைக்குத் தகுதியாயிருப்பார்கள், அதுவுமன்றி காவல் தொழிலில் பெரியகுற்றம் செய்துவிட்டால் அந்தத் தொழில் தன் குடும்பத்தைவிட்டு அகன்றுவிடும் என்கிற பயமும் அவர்களைத் தங்கள் தொழிலில் கண்ணுங்கருத்துமாக இருக்கும்படி செய்து வந்தது.

மேலே எடுத்துக் காட்டிய விஷயங்களிலிருந்து சந்திரகுப்தனுடைய குடையின்கீழ ஜனங்கள் எத்தனை சுகமாக வாழ்ந்து வந்திருக்கவேண்டும் என்று படிப்போர் அறிந்துகொள்ளுவார்கள். வயது முதிர்ந்தோருக்கு உபகாரங்கள், பஞ்சங்கள் நேராதபடி முன் காப்பு, பஞ்சங்கள் நேர்ந்தவிடத்து ஏழைகளைக் காப்பாற்றல்; தர்ம வைத்தியசாலைகள், கப்பல் சேதங்களுக்கு நஷ்டயீடு கொடுத்தல், தொழிலாளிகளுக்கும் எசமானர்களுக்குமுள்ள விவாதங்களைத் தீர்க்க மத்தியஸ்தரை நியமித்து வைத்தல், இவை முதலிய ஏற்பாடுகள் ஐரோப்பிய ராஜாங்கங்களில் இந்தத் தலைமுறையிலதான் செய்யப்பட்டிருக்கின்றன என்று நாம் காணும்போது 2200 வருஷங்களுக்கு முன் ஆரியவர்த்தமானது எப்பேர்ப்பட்ட நாகரீக நிலைமையிலிருந்திருக்கிறது என்று நாம் ஆச்சரியப் படவேண்டியதாயிருக்கிறது.

நமது நாட்டைப் பற்றிப் பொய் எழுதி வைக்க வேண்டுமென்கிற தூண்டுதலே இல்லாத அயல்நாட்டவர் சொல்லுகிற விவரங்களிலிருந்தும் சந்திரகுப்தன் அரசாட்சியானது உலகத்தின் மகா முகூர்த்தங்களில் ஒன்றாக இருந்திருக்க வேண்டும் என்று ஏற்படுகிறது. ஏனெனில் அக்காலத்தில் ஜனங்கள் சிறிதே

ளும் நாணயம் பிறழாமல் நடந்து வந்தார்கள். பெருந்த தொகைகள் கொடுத்து வாங்குகையிலுங்கூட ஜனங்கள் சீட்டுசாட்டில்லாமல் நம்பிக்கையின் பேரிலேயே கொடுத்து வாங்கிவந்தார்கள். அப்படிச்செய்தும், தாங்கள் நியாயமாய்க் கொடுக்க வேண்டிய கடனை யாவரும் மறுக்கமாட்டார்கள். 4 லட்சம் சைனியம் கூடியிருந்த கேவலம் பாசறையில்கூட நூற்றிருபது ரூபாய் பெறுமானத்துக்கு மேல் என்றைக்கும் களவு போனதில்லை என்று மெகாஸ்தனன் சொல்லுகிறான். நாட்டில் பொய்யென்பதே இல்லாமலிருந்தது. நெடுந்தூரம் யாத்திரை போகுங்காலத்தில் கூட ஜனங்கள் வீட்டைப் பூட்டிவிட்டுப்போவதில்லையானாலும் அவர்கள் திரும்பி வரும்போது பொருள்களெல்லாம வைத்தது வைத்தபடியே இருக்கும்.

இனி, மெகாஸ்தனனுடைய சாட்சியத்தை இங்கெடுத்துக் கூறுவோம். அவன் சொல்லுகிறான்: "இந்தியர் நியாயஸ்தலத்தில் சென்று வழக்குச்செய்வது மிகவும் அபூர்வமென்பதிலிருந்து அவர்களுடைய சட்டங்கள் எவ்வளவு நியாயமானவை யென்றும் அவர்களுடைய நாணயம் எவ்வளவு உயர்ந்தது என்றும் இனிது விளங்கும். ஈடுகளைப்பற்றியும் அடைக்கலப் பொருள்களைப் பற்றியும் அவர்களுக்குள் வழக்குகள் வருவதே இல்லை. பொருள்களை அடைக்கலமாக வைக்கும்போது அவர்கள்சாட்சிகள் தேடுவதேயில்லை அவர்கள் அப்படி அப்படியே போட்டுவிட்டுத் தூரதேசம சென்று விடுகிறார்கள்——சத்தியத்தையும் தருமத்தையும அவர்கள் மிகவும் பாராட்டுகிறார்கள். அதனாலேயே அபரிமிதமான ஞானம் இல்லாவிட்டால் அவர்கள் விருத்தர்களுக்கு விசேஷமான மரியாதைகளொன்றும் செய்வதில்லை——அவர்களுக்குள் களவு மிகவும அபூர்வம்".

போர்க் காலங்களில் நேரும் விலக்கமுடியாத தீங்குகளை ஆரியர் எத்தனை தூரத்துக்குக் குறைத்து விட்டிருந்தார்கள் என்று அந்த மெகாஸ்தனனே எழுதும் பின் வரும் வார்த்தைகளிலிருந்து தெரியும்: "மற்ற ஜாதிகளுக்குள்ளே போர் நேருங்காலத்தில் நிலங்களை அழித்துப் பயிர்களையும் சூறையாடிவிடுதல் சகஜமாக இருக்க, இந்தியருக்குள்ளே மாத்திரம் போர்க்களத்துக்கருகாமையிலுள்ள குடியானவர்களைக்கூட இருதிறத்து வீரரும் இம்சிப்பதில்லை, பயிரிடுவோரை வருத்துவது பாவம் என்பது அவர்களுடைய நம்பிக்கை. ஆகையால் போர் வீரர் ஒருவரை ஒருவர் கொலைபுரிந்து கொண்டிருக்கையில்கூட வேளாண்மைக்காரர் கிஞ்சித்தேனும் அபாயம் என்கிற உணர்ச்சியே இன்றிப் பயிர்த்தொழில் செய்து கொண்டிருப்பார்கள். படைவீரரும் அவர்களை எவ்விதமாயும் வருத்தமாட்டார்கள். தவிர இந்தியர் பகைவர் நாடுகளைத் தீயிடுவதுமில்லை, அங்கேவளரும் மரங்களை வெட்டிச்சாய்த்து விடுவதுமில்லை".

சந்திரகுப்தனும் ஒரு மகாராஜா இருக்கவேண்டிய தன்மையில் ஒரு எள்ளளவேனும் குறைவில்லாமல் இருந்துவந்தான். ராஜதானியில் யாகங்களும் உற்சவங்களும் வெகு விமரிசையாக நடத்துவான். கல்விமான்களுக்கும் கலைஞர்களுக்கும் வினையாளிகளுக்கும் இரவலர்களுக்கும் பரிசுகள் கொடுப்பான். சஸ்திர பரீக்ஷைகளும் போலிப்போர்களும நடத்தி அவைகளில் கைலாகவமும் ரதம் நடத்துவதில சாமர்த்தியமும் காட்டும யௌவன வீரர்களுக்கு வெகுமானமும் உத்தியோகப் பெருமைகளும், அளிப்பான். ராஜதானியிலிருக்கும்போது மந்திரசபையில் தானே வீற்றிருந்து உத்தரவுகள் செய்வான். யுத்தம் நேர்ந்தபோது தானே போர்முகத்துக்குச் சென்று சைனியத்தை நடத்துவான். ராஜ்ஜியமனைத்திலுமே அவனைப்போல இடைவிடாது வேலைசெய்வோர் ஒருவரும் இல்லை யென்னுமபடி அத்தனை வேலை செய்வான்.

சக்கரவர்த்தி ஒவ்வொரு நாளும் பேரத்தாணியின் கண்ணே ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உட்கார்ந்துகொண்டு குறை வேண்டுவோர் குறையையும் முறைவேண்டுவோர் முறையையும் கேட்பான். இந்தப் பேரவையில் யார் வேண்டுமென்றாலும் தாராளமாய் வரலாம். வலியோரால் நலியப்பட்டவரும் பெருந்த அநியாயங்களால் வருந்துபவரும் சக்கரவர்த்தியிடம் நேரே வந்து தங்கள் குறைகளைக் கூறிக்கொள்ளுவார்கள். இந்தப் பேரவைதான் அக்கிரமமாய் நலிவுற்றோரின் கடைசிப்புகலிடம். தாங்கள் செய்யும் அநீதிகள் அரசன் காதிற்கு எவ்விதம் எட்டிவிடப்போகிறது என்கிற பயமே அதிகாரிகளை அவரவர்கள் கடமையை நேரே செலுத்தும்படி தூண்டும் தூண்டுகோலாகவிருந்தது.

இவ்விதம் இராஜாதி ராஜனான சந்திரகுப்தன் சுமார் இருபத்திநான்கு வருஷம் அரசு புரிந்துவந்தான். இந்தக் கொஞ்ச நாட்களுக்குள் அவன் தன்

நாட்டைக் கிரேக்கப் படைகளினிடத்தினின்றும் தனநந்தனுடைய கொடுங்கோலரசினின்னும் மீண்டான். ஆரிய நாகரிகத்தைக் கிரேக்க நாகரிகம் புகுந்து கலக்காதிருக்கும்படி காத்தான். ஆரிய வர்த்தத்தில் ஒரு பெரிய ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்தான். அதில் ஜனானுகூலமான சட்டதிட்டங்கள் செய்துவைத்தான். தன் நாட்டைப் படையெடுத்துவந்த மிலேச்சர் சைனியத்தை நிலைகுலைத்து, அவர்கள் கீழ் அகப்பட்டிருந்த ஆரிய ஜாதியார்களையும் மீட்டு, அவர்கள் வசித்த நாட்டிலும் தன் ஆட்சியை நாட்டினான். அவன் காலத்தில் அவன் ஸ்தாபித்த ஏகாதிபத்தியத்தைப் போன்ற அரசு உலகில் எங்கும் இல்லை. அலெக்ஸாந்தர் ஸ்தாபித்த ஏகாதிபத்தியம் பத்து வருஷம் கூட நிலைநிற்கவில்லை. ஸெலியுக்கஸுடைய சக்ராதிபத்தியத்தில் ஆரிய வர்த்தத்தின் செல்வமாவது, க்ஷேமமாவது, கல்வி ஞானம் இவைகளின் பெருக்கமாவது இல்லை. விஸ்தீரத்திலும் அது சந்திரகுப்தனுடைய ராஜ்ஜியத்தை விடச் சிறியது. ரோமாபுரி அப்பொழுதுதான் மெல்ல மெல்ல இத்தாலியாவின் எல்லையைத் தாண்டிக் கையை நீட்டிக்கொண்டிருந்தது. சீனாவிலோ 400 வருஷங்களாக அழுகிக்கொண்டுவந்த சௌ என்று பெயருள்ள ராஜவம்சமானது ராஜ்ஜியாதிகாரமனைத்தையும் சாமந்தர் கையில் விட்டுவிட்டு, வலியிழந்து வெறும் பெயர் மாத்திரத்திற்குத்தான் ராஜ்ஜியாதிகாரத்தை வகித்துவந்தது. ஆனால் சந்திரகுப்தனுடைய ராஜாங்கத்தை அவன் காலத்து அரசுகள் எல்லாவற்றினும் அது முதன்மையாக இருந்தது என்று மாத்திரம் சொல்லிவிட்டால் போதாது. சிறப்பிலும் ஒளியிலும் அதற்கு இணையான ஏகாதிபத்தியங்கள் தேடிப்பார்த்தால் உலகில் அக்காலத்திற்குப் பிறகு சிலதான் அகப்படும். அசோகன்: ஔகுஸ்தன், பதினாலாவது லூயி, நப்போலியன், தீமூர், அக்பர் இவர்களுடைய அரசாட்சியைத்தான் சந்திரகுப்தனுடைய அரசாட்சியோடு ஒப்பிடலாம்.

[தொடரும்]

The Date of Chilappathikaram.

K. G. Sesha Iyer Esq., B. A., B. L., M. R. A. S.

[Continued from page 134.]

I have now dealt with the principal reasons advanced by Pandit Raghava Aiyangar in support of his view, and I have shown that they proceed on wrong assumptions of fact and mistaken interpretations of passages cited from an unpublished work, the text of which could not in the circumstances be critically examined or unhesitatingly accepted. I shall next consider Mr. Swamikannu Pillai's hypothesis. In an extremely interesting paper on "The system of Chronology in Early Tamil Literature" Mr. Swamikannu Pillai has sought to establish from certain astronomical data found in *Chilappathikaram* and *manimekalai* that those works must have been written in the 8th centuary A. C. The credit of discovering the importance of those data in the investigation of problems of *literary* chronology of the Tamil country belongs to Mr. Swamikannu Pillai whose contribution to the discussion of such prob'ems cannot be too highly estimated. I have read his paper carefully; indeed it is so fascinating and seductive; but I regret to say I do not find his arguments for the position he has assumed convincing. Let us consider his paper in some detail.

The passage in *Chilappathikaram* that are discussed by Mr. Swamikannu Pillai are found in நாடுகாண்காதை, text and commentary, and கட்டுரைகாதை. Tho opening lines of நாடுகாண்காதை tell us when the departure of Kovlan and Kannaki from Kaveripumpattinam took place. These lines are as follows:—

வான்கண் விழியாவை கறையாமத்து
மீன்திகழ் விசும்பின் வெண்மதிநீங்கக்
காரிருணின்ற கடைநாட் கங்குல்.

Adiyarkunallar's commentary on these lines contains the following note:—" அந்தச் சித்திரைத் திங்கட் புகுநாள்—சோதி, திதி மூன்றாம் பக்கம், வாரம் ஞாயிறு. இத்திங்களிருபத்தெட்டிற் சித்திரையும் பூரணையுங்கூடிய சனிவாரத்திற் கொடியேற்றி ' நாலேழ்நாளினும் ' என்பதனான் இருபத்தெட்டு நாளும் விழாநடந்து கொடியிறங்கி வைகாசி இருபத்தெட்டினிற் பூர்வ பக்கத்தின் பதின்மூன்றாம் பக்கமும சோமவாரமும் பெற்ற அனுடத்தில் நாட்கடலாடி ஊடுதலின் வைகாசி இருபத்தொன்பதிற் செவ்வாய்க் கிழமையும் கேட்டையும் பெற்ற நாசயோகத்து நிறைமதி பதினாலாம் பக்கத்து வைகறைப் பொழுதினிடத்து நிலவு பட்ட அந்தரத்திருளிலே யென்றவாறு,
The passage in கட்டுரைகாதை which reads as follaws.—

> ஆடித்திங்கட் பேரிருட் பக்கத்
> தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று
> வெள்ளிவாரத் தொன்றெரி யுண்ண
> வுரைசான் மதுரையோடரச கேடுறுமெனு
> முரையுமுண்டே.

relates to the destruction of Madura by fire as the result of K nnaki's *curse.'* Of these, the two passages from text, valuable as they are, are not obviously by themselves capable of yielding any definite result; but not so however, the commentator's note; and if the details mentioned in it be accurate, we ought to be able to establish with almost absolute certainty the date of *Chilappathikaram.* Mr. Swamikannu Pillai believes that the note by the commentator is capable of giving us a definite, unimpeachable date and he exultantly says that "between A. D. 1 and A. D. 1000 there was only one year, one month, and one day, satisfying all the conditions, and that was Monday, 17 May A. D. 756" Let us see if that statement is correct.

The passage in question gives the following details.

1. The month of Chitrai in that year commenced on Sunday, Thrithiya, Swathi Nakshatra.

2. 28th Chitrai was Saturday, Full moon Chitranakshatra. That day the flag was hoisted for the festival of Indra.

3. After 28 days-the duration of the festival-the flag was lowered.

4. On the 28th Vaikasi, Monday, 13th day of the bright lunar fortnight, Anusham star, the bath in the sea took place. and the lovers quarrelled.

5 On the 29th Vaikasi, Tuesday, Kettai, Nakshatram, which was a destructive combination, the 14th day of the waxing moon, after the moon had set, when the sky was dark (Kovalan left with Kannaki).

It will be noted that these details are not given in the text which simply says referring to the day of Kovilan's flight with his wife, that it was after the moon had set on the last day of the bright half, and before sun-rise the next *morning*, when the sky was dark. Supposing for a moment the details given by Adiyarkunallar are correct, whence did he get them ? The commentator lived probably in the 12th centuary; and even if Mr. Swamikannu Pillai's conclusion be accepted nearly four centuries had expired since the composition of Chilappatikaram before this note was written. Did Adiyarkunallar make his own calculation or did he repeat what he had heard. Mr. Swamikannu Pillai opines that there should have been 'a continuous unbroken tradition of annotation dating almost from the date of the poem; and the commentator in the present instance has preserved what he had obtained from earlier scholiasts. Even when that explanation, the commentator's note could not be accepted as really of value, as after all it might have been supplied by the ingenuity of an earlier annotator and as in the process of repetition it might easily have undergone alterations in material

particulars. However, the astronomical information supplied in the note seems to be thoroughly fanciful, as one could see from Mr. Swamikannu Pillai's paper itself. Besides, the reckoning of days in the note seems to be puzzling. We are told that the flag was hoisted on the 28th Chitrai, Saturday; and as we are told that the 28th Vaikasi was monday, the month of Chitrai in that year must have had only 30 days. So the festival, which was of 28 days *duration must* have closed on 25th Vaikasi, when the flag must have been taken down and one fails to see how the bath that concludes the festival took place as stated in the note, only on the 28th Vaikasi. There is no doubt from the narration of the story in the poem, that Kovalan and Kannaki left for Madura on the night of the bath itself before dawn of next morning; and yet we read in the note that they left on the *night* of Tuesday, the 29th Vaikasi. Obviously the note as it stands, even apart from its astronomical learning, is incorrect or not easily explicable. Is the astronomical information, at any rate, free from error? Mahamahopadhyaya Pandit V. Swaminatha Aiyar, the revered editor of *Chilappatikaram*, says in a foot note that the information contained in the note appears to be incorrect; but Mr. Swamikannu Pillai, while extolling the learned Pandit's candour, rebukes the astrologer that enabled that foot note to be written for ignorance of astrological calculation. I nevertheless venture to say that the conditions in this curious note are impossible and that the learned Mahamohopadhyaya's foot note is justified.

To arrive at 756 A. D Diwan Bahadur L. D. Swamikannu Pillai has freely edited the commentators' note. As regards the commencement of Chitrai in that year, he says that it was a day of Swati in the sense that Swati began on that day at 38 ghatikas after sunrise. He admits that ordinarily such a day would be called a day of *Chitra Nakshtra*; but in explanation of the commentator's blunder, he states that the *commentator* appears to have obtained his nakshatra by backward calculation from "jyeshta" the star under whose malignant influence; Kovilan and Kannaki left for Madura. This itself will be enough to condemn the note as untrustworthy. What is the basis for holding that it was on a Tuesday which coexisted with jyeshta star, that the husband and wife left their house in Kaveripattinam. Apparently the commentators' knowledge of astrology was so poor that he could not think of any other malignant combination except the popular Tuesday with Kettai star, and starting therefrom he worked the details backward as best as he could. If the star on the first day of Chitrai has, according to Mr. Swamikannu Pillai, been wronged in the note, so has also the **Thithi**, for he tells us that the **3rd Thithi** is a mistake for the **1st Thithi**. Thus this part of the note, in order to make A. C. 755 acceptable, should be made to read;—**The month of Chithrai in that year began on Sunday, Prathama, Chitrai Nakshatra**. The second part of the note declares that the 28th Chitrai was Saturday, Full moon, Chitra Nakshatra. Mr. Swamikannu Pillai points out that in 756 A. C. in the month of Chitrai, the full moon commenced at 41¼ ghatikas after sunrise on Sunday, and that Chitra Nakshatra terminated about sunrise, the same day. **Obvi usly, therefore, Saturday 28th Chitrai did not combine with full moon at all.** Indeed the **thithi** that was current at sun-rise on Saturday, and properly speaking the **thithi** of that day was **Thrayodesi** the 13th lunar day. However, Mr Swamikannu Pillai gets over the difficulty created by the commontators' *inconvenient statement* by inviting us to hold that by "full moon" must have been meant a day near full moon! Why the commentator who is at such considerable pains to supply details that will fill up **lacunae** in the astro-

logical reference in the text should be guilty of such loose writing, one cannot easily explain; but the suggestion is enough to stamp the statements in the note with unreliability.

Relating to Kovilan's departure with Kannaki, the note says, it was on Tuesday, 29th Vaikasi, under the malignant influence of Kettai (Jeyshta), after the moon of the 14th **thithi** in the bright fortnight had set, and before sunrise. The statement is very specific; and yet in order to apply it to 756 A. C. we should again hold that the language is loose. Though the language of the note would denote that Kovilan and Kannaki left in the small hours of the morning between Tuesday and Wednesday and that the moon of the 14th **thithi** had just set, and that further jyeshta coexisted with Tuesday at the moment they started, Mr. Swamikannu Pillai finds that every one of these portions has to be given up. According to him, the departure must have taken place in the small hours of the morning between Monday and Tuesday, that is before sun rose on Tuesday; that there was no combination of Jeshta and Tuesday when they started; (as a matter of fact Anusham lasted till 10 A. M, on Tuesday) that there was no **Chaturdesi** at all on Tuesday, which was, on the contrary a full moon day. We are told by Mr. Swamikannu Pillai that there was an eclipse at this full moon; and we may be permitted to doubt whether, if Mr. Swamikannu Pillai's date be correct, that fact could under any circumstance have been left out by the commentator who in the passage under discussion is trying to account for the subsequent disaster that befell Kovilan. A day of eclipse is astrologically condemned as highly disastrous for a journey; and it is strange that that pre-eminently bad omen is not mentioned at all, when according to Mr. Swamikannu Pillai, Adiyarkkunallar is so scrupulous as to mention the subsequent co-existence of Jyeshta star with Tuesday, the first day of the journey; though the subsequent **Nasa yoga** so created could not astrologically affect the destinies of Kovilan and Kannaki. It may also be noted here that on 29th Vaikasi, Sukla Triyodesi and Anusham did not coexist, as stated by the commentator.

I have tried so far to show how in spite of Mr. Swamikannu Pillai's statement that 756 A. C. satisfies all the conditions laid down in the note, there is not even one condition that without very material alteration could be made to apply to that year. Mr. Swamikannu Pillai has absolutely brushed aside the statement of the commentator as they are, and has substituted data of his own that will support his view. If instead of the 8th centuary, he had decided upon any other contuary, the same process of editing, the same process of revising and correcting, might still be adopted to arrive at that pre-determined conclusion. Mr. Swamikannu Pillai has not drawn his conclusion from the premises supplied by the commentator, but having apparently settled within himself what the result ought to be, he has suggested convenient premises which, however, are, as I have tried to show from his own paper, radically different from those stated by the commentator. The fact is that the commentator's account is hopelessly faulty in the information he has given us, and his note is useless for chronological investigations.

(To be continued.)

தொகைநூல் வரலாறு.

1. தமிழகத்திலே நமது தந்தையாராகிய தமிழர், ஆரியர் கலப்பு அவ்வளவு இல்லாமல் தழைத்து வாழ்ந்திருந்த காலம் ஒன்றுண்டு. அக்காலம், இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே என்பர் சிலர்; அதற்கு மேலும் என்பார் சிலர். அது எப்

படியாயினும் ஆகட்டும். அந்த வழக்கு நமக்கு வேண்டாம். அந்த அடி நாளிலே இத்தமிழகமானது வடக்கே வேங்கடவரையும், தெற்கே குமரியாறும், கிழக்கிலும் மேற்கிலும் கடலுமாகிய எல்லைக்குட்பட்டு கடலரண், கல்லரண், காட்டரண் முதலிய எல்லாக் காப்பையும் பெற்றிருந்தது. குறிஞ்சி நெய்தல் பாலை முல்லை மருதம் என ஐவகை நிலமாகவும், ஒளி முதலிய பலநாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தது.

2. *மலையும் அதுசார்ந்த இடமும் குறிஞ்சி; கடலும் அதுசார்ந்த இடமும் நெய்தல்; மணலும் அதுசார்ந்த இடமும் பாலை; காடும் அதுசார்ந்த இடமும் முல்லை, வயலும் அதுசார்ந்த இடமும் மருதம். குறிஞ்சி முதலான பெயர்கள், அந்தந்த நிலத்திலே மிகுதியாகக் காணப்பட்ட பூப்பற்றியே இடப்பட்டன. நிலந்தோறும் மாவும் மரனும் பூவும் புள்ளும் உணவும் உடையும் யாவும் வெவ்வேறு; மக்களும் வேறு; அவர் தொழிலும் வேறு.

குறிஞ்சியிலே தினைவிளைத்தும், தேன் அழித்தும் குறவரும்; நெய்தலிலே மீன்பிடித்தும், உணங்கலும் உப்பும் விற்றும் பரதரும்; பாலையிலே மாடுகவர்ந்தும் கொள்ளையடித்தும் மறவரும்; முல்லையிலே வரகு விளைத்தும், ஆடுமாடு மேய்த்தும் ஆயரும்; மருதத்திலே நெல்விளைத்து அரிந்தும் கடாவிட்டும் உழவரும் வாழ்ந்திருந்தார்கள். குறவர், பரதர், மறவர், ஆயர், உழவர் என்னும் பெயர்கள், அவரவர் வாழ்ந்த இடவகையாலும், செய்த தொழில் வகையாலும் அவருக்கு வந்தன; இக்காலத்திலுள்ள நூற்றுக்கணக்கான சாதிபேதம் அவ்ரிடம் இருந்ததில்லை. எல்லா நிலத்துமக்களும் உடன்பிறந்தார் போல ஒற்றுமை மிகுந்து, நீரும் நிழலும் போல இனியராய் அளவளாவி வாழ்ந்தனர்.

3. அவர் குன்றாவளமும் பொன்றா நலமும் வாய்ந்திருந்தார். துன்பம் துயரம் தூக்கம் இன்மை இரவு எழ்மை என்பவற்றை அவர் அறியார். காதலும் களிப்புமே அவர்க்குப் போது போக்காயின. சிறுவர் சிறுதேர் உருட்டியும் சிறுபறை அறைந்தும் ஆடுவர். சிறுமியர் சிற்றில் இழைத்தும் அம்புலி அழைத்தும் ஆடுவர். இளைஞர் மாவேட்டையாடியும் மற்போர் புரிந்தும், சேவல் சிவல்வென்றியில் செருக்கியும் களிப்பார். இளையர் சோலைமேவியும் சுனைநீராடியும் குன்றெதிர் கூவியும் குயிலெதிர் கூவியும் மலர் பறித்தும் மாலைதொடுத்தும் ஊசலாடியும் உடல்வருந்துவர். ஆடவரும் மகளிரும் தந்தம் மனத்திற்கினியாரையும் அன்பிற்குரியாரையும் மருவிமணந்து கொள்வார். ஒருவர் அடுப்பவும் கொடுப்பவும் இருந்து மணக்கின்ற வழக்கம் அந்நாளில் அரிதாயிருந்தது. பெற்றோர்க்கு விருப்பமான பெண்ணை, தம்பிள்ளைக்குக் கட்டிவைப்பது பிற்காலத்திலே பிறந்த வழக்கம்!

4. இவ்வாறு மனம்பொருந்தி மணந்து கொண்ட காதலர், தமது ஒழுக்கத்தை அயலார் அறியாமலே சிலகாலம் செலுத்துவர். அப்பொழுது அவர் எதிர்பாராத இடையீடு ஏதேனும் உண்டாகி ஒருவரை ஒருவர் எதிர்ப்படாத நாளும் வருமன்றோ! அந்நாளிலே அவ்விருவரும் தந்தம் இடத்திலே தனியே இருந்து, மனம் வருந்தி முகம் வாடுவரன்றோ! அவ்வருத்தமும் வாட்டமும் தீர, அவர் ஒருமுறை வாய்விட்டு அரற்றுவர். ஏனென்றால் இன்பமோ துன்பமோ ஒருவருக்கு எல்லைகடந்து வளர்ந்தபொழுது, வாய்விட்டு அழைப்பது உலகத்து வழக்கம்! அவ்வாறு அரற்றியதை அவருக்குப் பாங்காயினர் — உயிர்த்தோழனும் உயிர்த்தோழியும் — கேட்பார். அல்லது, அத்தோழனும் அத்தோழியும் அக்காதலர் முகவாட்டத்தைத்தாமே அறிந்து காரணம் வினவுவர். அல்லது, 'நமது மனவருத்தத்தை மாற்றவல்லவர் இவரே' என்று துணிந்து அக்காதலர் தாமே, தம்தோழருக்குத் தெரிவித்து, தாமுற்ற இடையூறு தவிர்த்துக்கொள்வார்.

5. இவ்வாறு அக்காதலர் ஒழுக்கம் அவர்தோழர் மட்டுமே தெரியும்படி சிலகாலம் செல்லும். செல்லும்போது, செம்மனமுடைய காதலரிருவரும் இரவும் பகலும் எதிர்ப்பட்டு அளவளாவிக்கொள்வார். இப்படி இவர்செய்தல் ஏனென்றால், ஒருவருடைய குணத்தையும் குற்றத்தையும் காதலையும் கருத்தையும் மற்றொருவர் நன்றாக அறிந்தறிந்து அளந்துகொள்ளும் பொருட்டேயன்றி வேறல்ல.

6. இவ்வாறு நாள் ஏற ஏற, அவர்காதலும் வழிமுறையே வளர்ந்து, சிறிது நேரமும் ஒருவரை ஒருவர் பிரியமாட்டாத பேரன்பினர் ஆவர். ஆயினும், இவர் மறைந்த ஒழுக்கமுடைய மக்களாதலால், காணும்பொழுதைக் காட்டினும் காணாப்பொழுதே இவ

ருக்கு மிகுதியாக இருக்கும். இருக்கவே, அப்பிரிவு ஆற்றாத காதலி ஊண் உறக்கம் ஒழிந்து, ஆடல் பாடல் அகன்று புலம்பியிருப்பாள். அது கண்ட அயலவர் 'இவள் காமத்தில் வீழ்ந்து கலங்குகின்றாள்' என அலர் (=பழிச்சொல்) எடுத்துத் தூற்றுவர். அது அறிந்த காதலன், அந்த அலர் அடங்கும்படி, சில காலம் தன் காதலியைப் பிரிந்து, தனியனாய்த் தன் ஊரிலே தங்கி உறைவான். உறைகின்றபொழுது அவனையும காமம் சுடும். பிரிவு தரியான், அந்தோ! என்ன செய்வான்?

7. இவன் செய்யக்கடவது இரண்டு காரியம் உண்டு. ஒன்று, உடன் போக்கு. மற்றொன்று, மணந்துகொள்ளல். தன் காதலி வாழும ஊரிலே சென்று அவ்விடத்திலே ஒருவரும் அறியாமல் அவளைத் தன் ஊரிற்கு உடன் கொண்டுபோய், அங்கே தன் பெற்றோரும் உற்றோரும் சூழ, மணம் புணர்ந்து கொண்டு மனையறம் நடத்துவான். இது உடன் போக்கு. இச் செய்கை, அக்காலத்திலே பழிப்புடையதன்று!

8. இனி, இவ்வாறும் செய்வான். தனக்கு ஆக்கமான அறிவோரை அழைத்து 'இன்னாளை எனக்கு மணம் பேசி வாருங்கோள்' என விடுப்பான். அவரும், அவன் சொற்படியே சென்று, அவன் காதலியின் பெற்றோரைக் கண்டு பெண்கேட்பார். கேட்க, 'அப் பெற்றார் ' என் மகள் மதிப்பில்லாத மாணிக்கம் அல்லவோ! பொன்னுலகும் விலைபோதாத பொன்னம் பாவை அல்லவோ! நங்கள் குலமும் குடியும் நலமும் நோக்கியே இவளைக் கொடுக்க ஒருவாறு இசைகின்றேம. ஆயினும், இன்ன இன்ன பரியம் எமக்கு வேண்டும்' என்பர்.

9. அந்தப் பரியம் நிலத்திற் கேற்ப பலவகையாயிருக்கும். குறிஞ்சியானால், 'நம் குறிச்சியிலே வந்து புகுந்து திரிகின்றது ஒரு வரிப்புலி; அதன் பல் கொண்டு வா!' என்பார். நெய்தலானால், 'அம்பி ஏறி ஆணிமுத்துக் குளித்துவா' என்பார். முல்லையானால், 'கட்டுக்கு அடங்காத எங்கள் காளையைக் கட்டிவா' என்பார். மருதமானால், 'பொன் வேண்டும்; மணி வேண்டும' என்பார். பாலையானல, உச்சிக்கிளையிலே தொங்குகின்ற ஒற்றைக் கனியைக் காட்டி 'அந்தசெல்விப் பழத்தை நிலஞ்சோராமல் வில்லேற்றி வீழ்த்திவா' என்பார்.

10. இவ்வாறு பெண்ணைப்பெற்றோர் எண்ணிக் கேட்கும் பரியம் எதுவானாலும், காதலன் கடுமுயற்சி செய்து, கொண்டுவந்து கொடுத்து, முதியோரும் மதியோரும் வாழ்த்த, தன் காதலியை மணந்து கொண்டு தன் ஊரைச் சேர்ந்து இல்லறம் நடத்தி இன்பம் நுகர்வான். அக்காலத்தவர்களுக்கு [இக்காலத்திலே நமக்குள்ள) சடங்குகள் இல்லை. நமது சடங்குகளெல்லாம் பிற்காலத்தே இருடிகள் கட்டிவைத்தவை. இது இவ்வாறென்பது,

> "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
> ஐயர் யாத்தனர் கரணம் என்ப"
>
> (பொருள். கற்பு 4)

என ஆசிரியர் தோல்காப்பியனார் கூறுமாற்றானும் துணியப்படும்.

11. இது நிற்க, தன் காதலி மெய்யன்புடையளாயிருக்கவும், அவள் பெற்றோர், அவளைத் தனக்கு மணஞ்செய்ய மறுப்பாரானால், காதலன், 'நும்மகள் பொருட்டுத் தீயிடைப் பாய்தல், மலையேறி வீழ்தல், மடன்மா ஏறுதல் முதலான இழிவான காரியங்களையும் செய்வேன்' என அவருக்குச் சொல்லியனுப்புவான்.—மடன்மா ஏறுதல் என்பது பனங்கருக்கினாலே குதிரை செய்து, அதன் மேலேறி எருக்கமாலை சூடி, தன்னையும் தன் காதலியையும் படமெழுதிக் கையிற்பிடித்து, ஊரின் நாற்சந்தியிலே நிற்பது—மடன்மா ஏறுதல் முதலிய தொழில்களை ஓர் ஆடவன் ஒரு பெண்ணின் பொருட்டுச் செய்வானாயின், அது அப் பெண்ணைப் பெற்றோருக்கு மிகவும் மானக்கேடாக மதிக்கப்படும். ஆதலால் அவன் அச்செய்கை ஒன்றைச் செய்யுமுன்னே 'இவன் இவளிடம் மெய்யன்புடையவனாம்!' என்று தட்டாமல் தம் மகளை அவனுக்கு மணஞ்செய்து கொடுப்பார். அப்படிக் கொடாராயின், காதலன் தான் சொல்லியவாறே செய்து உயிர்விடுவான்.

12. இனிக் காதலியும், தன்னைப் பராமுகம் செய்து காதலன் புறக்கணித்தாலும், தன் பெற்றோர் அவனுக்கு மண மறுத்தாலும், தன்னை உடன் கொண்

டுபோக அவன் உடன்படாவிட்டாலும் திமுழ்கியாவது வரை புரண்டாவது அவள் வாழ்க்கை ஒழிந்து விடுவாள்.

காதலர் மணம் புணர்ந்த பின்னே மனம் பொருந்தி மனையறம் நடத்தும்பொழுது காதலன் கல்விகற்றல், துணைபோதல், பொருள் தேடல் முதலிய தொழிலை முன்னிட்டு, தன் காதலியை இல்லத்தே விட்டு, காடும நாடும் கடந்து பிரிந்து போவான்; இன்பத்தின் பொருட்டும் இல்லினின்று நீக்கிச் சிலகாலம் வெளியே உறைவான். அக்காலங்களிலே அவனுடைய பிரிவாற்றுமையால் காதலி தன்னந்தனியே இருந்து, அழகழிந்து, உடல் மெலிந்து, அழுதுவருந்துவாள். பின்னும, அறம் பொருள் இன்பம் கருதி அகன்றிருந்த காதலன், அவற்றை அடையப் பெற்று, திருமபி நாடு வந்து சேர்ந்து, தன் காதலியைக் கூடிக்களித்து வாழ்வான். அப்பொழுது அவ்விருவரும் இணங்கியும் பிணங்கியும் இன்பம் உண்டும், மக்களை வளர்த்தும், விருந்து புரக்துமம, இல்லறம் தவறுமல் இயற்றுவர்.

14. இதுவரையிலும் சொல்லிய வாற்றுல் கூடல் பிரிதல் உடன் போதல் இரகசல் இல்லிருத்தல் என்னும் ஐந்து செய்கையும் காதலரிடத்தே காணப்படுகின்றதென்றும், அச்செய்கை காதல் காரணமாகத் தோன்றுகின்றதென்றும் தெரிவித்ததாம்.

15. கூட்டம் இன்பத்தையும், அவ்வின்பம் உவகையையும் தரும். பிரிவு துன்பத்தையும், அத்துன்பம் அழுகையையும தரும். உவகையும் அழுகையும் ஒருவருககு வாய் வெருவிப் பேச்சு பிறப்பிக்கும். இவையுலகத்துத் தன்மை. இனனும், ஒருவர் தனது மனமகிழ்ச்சியைப் பிறரிடம் பேசினுலும வாய்விட்டுப் பேசினுலும அம்மகிழ்ச்சி முன்னைய அளவிலே மிக்கு வளர்தல் இயல்பாதலால், காதலர் உடனிருந்த பொழுதும் தனியிருநத பொழுதும் வாய்விட்டுப் பேசுவர், அப்பேச்செல்லாம பழுத்த இனிமையும் முழுத்த சுவையும் சிறப்பப் பண்ணமைந்த பாட்டாகவே இருக்கும். ஏனென்றல், பாட்டென்பது கிளர்ச்சி குன்றுத மனததிலிருந்து ஊறறெடுத்து ஊறிவழியும அமுதவெள்ளமே அன்றே? மெய்க்காதலர் மனமானது மகிழ்ச்சியினுல் மலாந்து, கரைபுரண்ட அன்பும்அருளும், ததும்பி, தெய்வத்தன்மை மணந்து, தேனூறிக் கிடப்பது. ஆகையால், அவர் வாயிலிருந்து வருகின்ற பேச்சு, விழுமிய புலவர் செய்யுளைப்போல ஒழுகிய ஓசைமெலிந்து வனப்பெல்லாம் குழுமியதேயாம். இன்னும், ஒருவர் தனது மனவருத்தத்தைப் பிறரிடம் பேசினுலும் வாய்விட்டுப் பேசினுலும் அவ்வருத்தம் முன்னைய அளவில் சுருங்கிக் குறைதல் இயல்பாதலால் காதலர் உடனிருந்தபொழுதும் தனியிருந்த பொழுதும் வாய்விட்டுப் பேசுவர் அப்பேச்சும், கனியாத கருங்கல் மனத்தையும் கனிவித்து, இளக்கியுருக்கும் இனிய பாட்டாகவே இருக்கும்.

16. இவ்வாறு இன்பமும் துன்பமும் தோன்ற இவர் பாடிய பாட்டெல்லாம் 'அகப்பொருள்' எனப்படும். அகப்பொருள்—அன்பினுல் வந்த இன்பம். இன்பவொழுக்கம் அன்படியாகப் பிறப்பதாதலாலும் அன்பானது உள்ளத்திலே உணர்ந்தறியும் கருத்துப் பொருளாதலாலும், அன்பினுல் வந்த இன்பம காதலிருவர் அகத்திலே நிகழ்வதன்றி, புறத்தார்க்குப் பேசப்படாதது ஆதலாலும், அகப்பொருளெனப்பட்டது.

17. இது இவ்வாருக, அக்காலத்து ஆடவர் புகழ்பட வாழவே விருப்பமுடையவர். ஆகையால் அப்புகழைப் பெறுதற்குக் காரணமாகிய அன்பு, ஈகை கல்வி, வீரம் முதலிய அருஞ்செயல்களையே அவர் செய்துவந்தனா. பகைவருடைய பசுமந்தை கவரப் போவார். பகைவர் கவர்ந்துபோன தம் பசுமந்தையை மீட்டுவருவார். பகைவா நாட்டைப் பற்றிக்கொள்ள நினைந்து அவர்மீது படையெடுத்துப் போவார் போர் செய்யும்படி தம்மேல் படையெடுத்து வந்த பகைவரை எதிர்சென்று ஏற்பார். பகைவர் கைக்கொள்ளாமல் தம்மதிலைக் காப்பார். பகைவருடைய மதிலைக்கொள்ளும் பொருட்டு வளைந்து கொள்வார். போர்செய்வார். வெற்றிபெறுவார். இவ்வகைச் செயல்களையே அவா என்றும் செய்து தம்வீரத்தை வெளியிடுவார். போரிலே தமக்கு அடைக்கலப்பட்ட ஆட்களை அன்புடன காப்பார். தம் வெற்றியைப் புகழ்ந்து பாடிவரும் பாணருக்கும் புலவருக்கும் பொருநருக்கும், தாம் போரிலே பெற்றுவந்த பொருளெல்லாம் வரையாது வழங்குவார்.

18 அன்றியும், அவர் யானை குதிரை யாடு சேவல் முதலியவற்றைப் பழக்கிப் போருக்குவிட்டும், தாம் கற்றுப்பழகிய ஆடல் பாடல் கல்வித் திறங்களை

அரங்கேறிக் காட்டியும் வெற்றியும் தோல்வியும் அடைவர். அவ்வெற்றியும் தோல்வியும் கண்டுகந்த பாணரும் புலவரும் நண்பரும், அவரைப் புகழ்ந்தும் இகழ்ந்தும் பாடிப்பாடிப் பரிசில் பெற்றுக்கொள்வார். அன்றியும், ஒருவன் செல்வத்தில் செருக்கியும், போகத்தில் மூழ்கியும் அறம் மறந்து அல்லன செய்யக்கண்டால் கற்றறிந்த முதியோர், உடல் உடைமை இளமை என்னும் இவற்றின் நிலையாமை எடுத்துக்கூறி, 'அறம் செய்க' என்று அவனுக்கு அறிவுறுத்துப்பாடுவர்.

19. இவ்வாறு வாழ்த்தியும் வைதும் கழறியும் பாடிய பாட்டெல்லாம் 'புறப்பொருள்' எனப்படும். புறப்பொருள் அறமும் பொருளும். இவ்வொழுக்கம் அறம்பொருளடியாகப் பிறப்பதாதலானும், அறம் பொருள் பற்றிச்செய்யும் செய்கைகள் கண்ணால் கண்டறியுங் காட்சிப்பொருளாதலானும், இதைக் கண்டவர் பின்னும் எடுத்துப்பிறருக்குப் பேசக்கூடியது ஆதலானும், புறப்பொருளெனப்பட்டது.

20. மேலே காட்டிப் போந்தவாறு பலவேறு காதலரும், கண்டோரும், பலவேறு காலத்திலே பலவேறிடத்திலே பலவேறுசமயத்திலே பலவேறு மனநிலையோடிருந்து பாடிய அகப்பாட்டு புறப்பாட்டுகள் அளவில்லாதன. அவற்றின் அருமையும் அழகும் அறிந்த நம்முதாதையர், தம் மக்களாகிய நமக்கு எய்ப்பில் வைப்பாக ஈட்டி வைத்துப் போயினர். அவற்றுள் பலநீரின் வயிற்றிலோ நெருப்பின் நாவிலோ செல்லின் வாயிலோ புல்லியர் கையிலோ பட்டு அந்தோ! நம் பாவத்தின் பயனாக மறைந்தொழிந்தன. போனவைபோக, எஞ்சிய பகுதியும் நாம் இழந்து போகாதபடி முற்காலத்திருந்த தமிழ்வேந்தர் மூவரில் சிலர், பல புலவரைக்கொண்டு தொகைநூலாகத் தொகுத்து வைத்தனர். அவையே இக்காலத்து 'எட்டுத்தொகை' என்று வழங்குவன. இவ்வெட்டுத்தொகையுள், குறுந்தொகை, நற்றிணை, நெடுந்தொகை, (—அகநானூறு) இம்மூன்றும் அளவுபற்றியும்; ஐங்குறுநூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து இம்மூன்றும்பொருள்பற்றியும், கலித்தொகையும் பரிபாடலும் பாவகைபற்றியும் வகுத்துத் தொகைசெய்யப்பட்டன.

21. இனி, இவ்விலக்கியங்களுக்குத் திணையே துறையே முதலிய இலக்கணங்களை மிக விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக்கூறும் நூல்கள் மூன்று. அவை தொல்காப்பியப் பொருளதிகாரம், இறையனார் அகப்பொருள், வெண்பாமாலை என்பன.

22. மேற் சொல்லப்பட்ட தொகைநூல்கள், மக்களிடத்தே நிகழும் அறம் பொருள் இன்பவொழுக்கங்களை நயங்கெடாமல் எடுத்து விரிப்பன. அவற்றில் அங்கங்கே வரும் உவமைகள் அதிக அருமையானவை. எவ்வளவு அருமை! நெடுங்காலமுன்னே நிகழ்ந்த அச்செயல்களை இக்காலத்தே படிக்கின்ற நமக்கு, கண்முன்னே காண்பது போலத் தெளிவாகக் காட்டி, உவகை அழுகை முதலிய மெய்ப்பாடுகளையும் நமக்கு உண்டாக்குகின்றன என்றால், அவை இன்னபடி என்று எடுத்துரைக்கலாகுமோ?

23. இப்பாட்டுகள் பலசமயங்களிலே பலராலே பாடப்பட்டன என்று முன்னமே சொன்னோம். ஆகையால், 'இது நிகழ்ந்த பின்னே இது நிகழவேண்டும்' என்ற துறைமுறை இத்தொகைநூல்களிலே சாலத்தவறிக்கிடக்கின்றன. இவற்றைத் தொகுத்தோரும் ஏதோ சிறந்த காரணம்பற்றி, தொகை செய்தகாலத்திலே, துறைமுறை வகுத்தாரில்லை. எனவே, 'இந்நூல்களுக்கு இது ஒரு குறை' என்பதன்று எம் கருத்து; மற்று இவற்றின் தன்மை உரைத்ததாமென்க.

24. பண்டைக்காலத்திலே நமது தென் மொழியிற்பயின்றுவந்த யாக்கள் இரண்டே; அவை வெண்பா அகவற்பா என்பன. ஆதலால், இத்தொகைநூல்களின் பாட்டுகளெல்லாம் அகவற்பாவினால் ஆயின. அகவற்பா, நீரின் ஒழுக்குப்போல நில்லாது மொழுமொழுவெனத் தவழுவதாகையால், ஒருவர் உள்ளக் கருத்தைத் தெள்ளத் தெளியவும் எளிதாகவும் சொல்லுவதற்கும் கேட்டோர் செவ்வனே தெரிந்துகொள்வதற்கும் மிகவும் தகுதியுள்ளது. பலபல பாவும் பாவினமும் பகுக்கும் இக்காலத்திலே அப்பாட்டுகளுக்குத் தூக்கும் வண்ணமும் தூக்கி நிறுத்துவார் உண்டோ?

25. இதுவரையும் சொல்லிப் போந்தவற்றால், அறம்பொருள் இன்பவொழுக்கங்களே அகப்பொருள் புறப்பொருள்கள் எனவும்; அவ்வொழுக்கம் இன்னபடி நிகழ்கின்றன எனவும்; அகப்பாட்டு காதலராலும் புறப்பாட்டு கண்டோராலும் முற்காலத்தே பாடப்பட்

டன எனவும்; அவற்றுள் அழிந்தன போக நின்றவற்றை அக்காலத்து வேந்தர், பல புலவரைக் கொண்டு பலவேறாக நூல்களாகத் தொகுத்தனர் எனவும்; அவையே 'எட்டுத் தொகை' எனவும்; அவை உவமை நயத்தில் உயர்ந்து அகவற்பாவால் அமைந்தன எனவும் தொகை நூல் வரலாறு ஒருவாறு தெளிவித்ததாமென்க.

(கலாசிந்தாமணி)

The presence of Death.

K. G. Sankara Aiyar B. A., B. L.

My sight is dim. The path is long,
That leads to His high throne above.
My only guide the spirit song;
To light my way alone my love.
Beyond the darkness and the roar
Of stormtossed wave and shrieking wind,

I hear his voice from the other shore
In vacant chambers of my mind
"Come to me all that are in pain.
The helpless and the weak are dear
To my mother heart," and through the rain

Of tears, I see His face is near.
He cleaves the knot that binds my soul
To earth. I sink with sudden fear.
He lifts me up. I see the whole.
I see the one afar or near.

K. G. Sankara Aiyar B. A: B. L.

Temptation.

Sankaramuthu Pillai.

Be off for ever Temptation pitiless
Thou art my vassal totally powerless,
Doubtless thou hast control over many
But, mind, I am above thy trick any
Oh monster! thou corrupteth countless hearts
That would be pure, but for thy cunning arts.
Thou screeneth the spiritual splendour of Him
And thus maketh the soul lie dark and dim!
Curses of suffering souls are thy gain,
Bundle up thy things, linger not in vain.
I am monarch of my body and mind;
Be sure, no foothold in them thou wilt find.
Well, in this age of knowledge and wisdom
Thou needst not dream of heritage and kingdom,
Many a Buddha and many a Jesus
Appear now to dash thee to pieces.
Before Truth a mightier monarch than thou,
We kneel down, breathing his universal love.
Let not weak minds thy seeming sweetness taste.
And thus their life-time deplorably waste.

ஆங்கிலக் கல்வியின் நிலையும் விலையும்.

ஸ்ரீமாந் P. S. மாணிக்கம் செட்டியார் அவர்கள்.

தேசபாஷைமூலம் உயர்தரக் கல்வி கற்பிக்கப் பட்டால் மட்டுமே, தேசாபிவிர்த்திக்கு அநுகூலமா யிருக்குமென்னும் கொள்கை, எங்கும் பரவிவரும் இக் காலத்தில் "ஆங்கிலக் கல்வியின் நிலையும், விலையும்" என்ற விஷயத்தைப்பற்றி நான் பிரசங்கம் செய்யத் தொடங்குவது அநேகருக்கு ஆச்சரியமாயிருக்கலாம். உண்மையில் எனக்கும் அதுவே கொள்கையானாலும், அக்கொள்கையைக் கையாட்சிக்குக் கொண்டு வரவேண்டிய காலத்தைப்பற்றித் தான் நான் அபிப்பிராய வித்தியாசமுடையவனாயிருக்கிறேன்.

தேசபாஷாபிமானிகளில் அதித வாதிகளான சிலர், உடன் தானே ஆங்கிலக் கல்விச் சாலைகளையெல்லாம் அடைத்துவிட்டு, தேச பாஷைகளை கற்பிக்கத் தொடங்க வேண்டுமென்று வாதிக்கிறார்கள். நானோ அங்ஙனம் செய்தால், ஆபத்துக் கிடமாகுமென்றும்,

நமது தேச பாஷைகள் ஆங்கில பாஷையைப் போல் உயர்தர நிலைமையை அடைந்த பின்னரே, அவ்விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கத் தொடங்க வேண்டுமென்னும், அபிப்பிராய முடையவனுயிருக்கிறேன்.

ஆனல் தண்ணீரிலிறங்காமல் எப்படி நீந்துவதில் திறமையடைய முடியாதோ, அப்படியே தேசபாஷை மூலம் உயர்தரக் கல்வி கற்பிக்கப் பட்டாலன்றிபாஷை உயர்தர நிலைமையை அடையாதென்றும், மேலே சொன்ன அபிதவாதிகள் சொல்லுவார்கள். ஆனல் இந்த உபமானம் கேள்விக்கு மிக இன்பமுடையது போல்த் தோன்றினுலும், சந்தர்ப்பத்துக்கு ஒரு சிறிதும் பொருத்தமுடையதல்ல.

ஆகவே தறகாலத்திய நிலைமைக்கு ஆங்கிலக் கல்வியே நமக்கு மிகவும் முக்கியமானதென்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம். ஆனல் அதற்குத் தகுதியான நியாயங் கூறவேண்டியது என்னுடைய கடமையாக ஏற்பட்டிருக்கின்றது.

அங்கனம் நியாயங்கூற புறப்படும்போது தருக்க முறைப்படி தேச பாஷைகளின் தாழ்ந்த நிலைமையை பற்றிக் கூறவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

ஏனெனில் இரண்டு பொருளில் ஒன்றை உயர்வானதென்று ஸ்தாபிக்க வேண்டுமானல் மற்றது தாழ்வானதென்று காட்டவேண்டியது அவசியமல்லவா? ஆதலால் தேச பாஷைகளின் தற்கால நிலைமையைப் பற்றிச் சிறிது ஆராயத் தொடங்குகிறேன்.

இந்தியாவில் எத்தனையோ தேச பாஷைகளிருக்கின்றன. ஆனல் எனக்குத் தெரிந்த "தமிழ் பாஷை" யின் நிலைமையைப் பற்றியே நான் இப்பொழுது கூறப்போகிறேன்.

இன்று இங்கு அக்கிராஸனதிபதியாயிருக்கும் கனம் அருணசலமய்யர் B. A, M. E. அவர்களும் தேசபாஷைக் கல்வி விஷயத்தில் என்னைப் போன்ற அபிப்பிராய முடையவர்களாகையால், அவர்கள் அவர்களுடைய முடிவுரையில, மலையாளத்தின தற்கால நிலைமையைப் பற்றிப் பேசுவார்கள்.

நமது அமிழ்தினுமினிய தமிழ்ப பாஷையில் எத்தனையோ சிறந்த காவியங்களும், நீதி நூல்களும், பக்தி விஷயமான கிரந்தங்களும், தேவாரம் திருவாசகம் திருவாய்மொழி ஆதியான தோத்திரப்பாக்களும் இருக்கின்றன என்பது உண்மையே. ஆனல் ஒரு மனிதனது ஞான வளர்ச்சிக்கு இவைமட்டும போதவே போதா. கம்ப ராமாயணத்தில் ஒரு பாட்டுக்கு மூன்ரு நாலோ மணி நேரம் வியாக்கியானம் செய்யக் கூடிய பாண்டித்தியமுள்ள தமிழ் வித்துவான்களும் இராகு கேதுக்களாகிய தேவ சர்ப்பங்கள் விழுங்குவதனுலேயே சூரிய சந்திர கிரகணங்கள் உண்டாகின்றனஎன்று கூறுவார்கள்.

ஆங்கில முறைப்படி தேசபாஷை கற்கும் நான்காவது வகுப்பு மாணவர்களும் கூட இந்தக் கொள்கை எவ்வளவு ஞான சூனியமானதென்று எளிதில் அறிந்துகொள்வார்கள். கோழி கூவுதலினுல் மட்டுமே நேரம் விடிகிறதென்றும், இரணியன பட்டதினுல் அந்த சந்திகளில் வானம சிமக்கிறதென்றும், இராவணன் ஆணைக்குப் பயந்து சூரிய சந்திரர்கள் இலங்காபுரியின் வடபுறமும், இடபுறமும் மாறி மாறிச் சுற்றி வந்ததற்கு அறிகுறியாகவே இப்பொழுதும் உத்தர தக்ஷிணயனங்கள் உண்டாகின்றனவென்றும் நம்புகிற தமிழ்ப் படிப்பாளிகள் இக்காலத்தும் இருக்கிறார்கள்.

அன்றியும் இலக்ஷ்மியும், ஸரஸ்வதியும் சக்களத்திப் பகையுடையவர்களென்றும், அதனுல் கல்விமான்களெல்லாம் தரித்திரவான்களாகவே இருப்பார்கள் என்றும நம்மவர்கள் இப்பொழுதும் நம்புகிறார்களல்லவா? இதற்கெல்லாம் காரணம் என்ன?

நம்மவர்களுக்குள் சாஸ்திரப் பயிற்சி இல்லாமையே. இங்கே நான் சாஸ்திரமென்பது மேனாட்டு (Science) ஸயன்ஸுகளே அல்லாமல் நமது பல்லி சாஸ்திரமும், ரேகைசாஸ்திரமுமல்ல. ஆனல் இவைகள் பொய்யென்று நான் சொல்ல வரவில்லை.

உண்மையான அறிவு வளாசசிக்கும், செல்வ வளர்ச்சிக்கும உதவியாக நிற்பது சாஸ்திரமே யல்லாது வெறும இலக்கணமும் இலக்கியமுமல்ல. அழகான கற்பனைகளமைந்த பாட்டுகள் பாடுவதினுலும், இலக்கண முறைப்படி அட்சரங்களை மாத்திரைக் கணக்கில் உச்சரிப்பதினுலும் வயிற்றுப பசியடங்காது. தென்னைமரத்தைப் பற்றி நிமிஷத்துக்கு நூறு கவி பாடும் திறமையுடைய புலவருக்கு அதன் உற்பத்தி, வளர்ச்சி

உபயோகம் முதலியவற்றை உணர்ந்து, அதிலிருந்து பொருள் சம்பாதிப்பதற்குள்ள வழியை அறியமுடியாமலிருக்கிறது,

ஆங்கிலப் படிப்பாளியோ, தென்னையைப் பற்றி கவியோ, வசன நூலோ எழுத சக்தியுடையவனாயிருப்பதுமன்றி அதன் சவரியிலிருந்து பலவிதமான பாய்கள், மெத்தைகள் முதலியவன செய்யவும், எண்ணெயிலிருந்து மெழுகுவத்தி, சோப்பு முதலியன உண்டாக்கவும், மற்றும் பலவித விலையுயர்ந்தபொருள் உண்டாக்க உபயோகிக்கவும அறிவுடையவனாயிருக்கிறான்.

வியாபாரம், கைத்தொழில், கிருஷி முதலிய பொருள் சம்பாதனத்துக்குள்ள முயற்சிகளெல்லாம் ஆங்கிலப் படிப்பினாலே விர்த்தியடைகின்றன. தேச சரித்திரங்கள், பூகோளசாஸ்திரங்கள், இரசாயனசாஸ்திரம், இயற்கை சாஸ்திரம், ஜீவவர்க்க சாஸ்திரம், தாவரசாஸ்திரம், மனோதத்துவ சாஸ்திரம் முதலியன ஆங்கில முதலிய ஐரோப்பிய பாஷைகளிலே அன்றி நமது நாட்டு பாஷைகளில் இல்லவேயில்லை. தேகப்பயிற்சிக்குரிய விளையாட்டுகளிற்கூட சாஸதிரீக முறையில் ஆராய்ச்சிகள் பல ஆங்கில பாஷையிலிருக்கின்றன.

வைத்திய சாஸ்திரத்திலும் எத்தனையோ நூதன முறைகள் உண்டாக்கியும், உண்டாய்க் கொண்டிருக்கின்றன. வேட்டைகள், ஜலவிளையாட்டுகள், காலப்போக்குக்கான நொடிப் பேச்சுக்கள் முதலியவைகளுக்குங் கூட நாளுக்கு நாள் எத்தனையோ நூல்கள் உண்டாய்க்கொண்டே இருக்கின்றன.

பிரபஞ்சத்தின் அமைப்பு, அதன் விரிவு, அதிலுள்ள ஜீவகோடிகளின் தொகை, அண்டகோளங்களின் அளவு, தன்மை, தாவரங்களின் நிலைமை, இப்பிரபஞ்ச அமைப்பில மனிதருக்குள்ள ஸ்தானம், முதலிய அநந்தம் விஷயங்களை அறிவதற்கும் ஆங்கில பாஷையே சிறந்ததென்று ஆயிரம் முறை சொன்னாலும் மிகையாகாது.

அரசன்கடமை, குடிகள் கடமை, அரசனுக்கும், குடிகளுக்குமுள்ள சம்மந்தத்தின் இயல்பு, மனிதனது இயற்கைச் சுதந்திரம், உலகியலில் எல்லாமனிதருக்கும் முன்னேறுவதற்குள்ள சமஉரிமை, மனிதகோடிகளின் சமத்துவம் முதலிய அனேக ராஜாங்க சமுதாய உண்மைகளை உணர்த்துவதிலும ஆங்கிலக்கல்வி இணையற்றதாக இருக்கின்றது.

பிறப்பினால் மனிதருக்கு ஏற்றத்தாழ்வு இல்லையென்றும், ஒழுக்கமே உயர்குலமென்றும்தெளிவாய்ப் போதிப்பதிலும் ஆங்கிலக் கல்வி அதியுன்னத ஸ்தானமுடையதாகவே இருக்கின்றது. சுருங்கச் சொன்னால் இப்பிரபஞ்சத்தின் அற்புதங்களையும், வளர்ச்சியே நோக்கமாகவுள்ள அதின் போக்கையும், அப்போக்கிற்கு உதவிபுரியக் கடமைப்பட்டுள்ள மனிதனது நிலைமையையும், இப்பிரபஞ்சத்தில் மனிதனுக்கு ஏற்பட்டுள்ள சுதந்திரமான நாயகத்தன்மையையும விளக்கிக்காட்டி மனிதனை எப்பொழுதும் உயர்வான நோக்கத்தோடு உழைக்கத் தூண்டுவதற்கு ஆங்கிலமே மிகவும் சிறந்த பாஷை.

உலகம்பொய், உலக வாழ்க்கையும் பொய், உடம்பும்பொய் அம்மட்டோ, யாவும் பொய் என்று கூறி மனிதனை முனைமழுக்கும் துர்குணம் ஆங்கிலபாஷைக்கில்லை. இதனால் நமது தேசபாஷையை நான் ஆட்சேபித்துச் சொல்வதாக ஸகோதரர்களே நீங்கள் நினைத்துக் கொள்ளக் கூடாது.

இப்பிரபஞ்சத்தை சர்வவல்லபரான கடவுள் உனது அனுபவத்திற்காகப் படைத்திருக்கிறார். அதனைச் சொர்க்கமாக்கவும, நரகமாக்கவும், உனக்கு சுதந்திரமுண்டு. உனகடமையை உணர்ந்து உண்மையாகவும் ஊக்கமாகவும் ஒரே நோக்கமாகவும் உழைத்தால் உனக்கு அதின் அரசனாக முடியும். இன்றேல் நீ என்றும்அடிமையாகவேயிருப்பாய். நீ ஒருவனுக்கும் அடிமையன்று. உன்வாழ்வுக்கும், தாழ்வுக்கும் நீயே காரணன், என்பனவாகிய உத்தமக் கொள்கைகளை பிரத்தியட்சமான திருஷ்டாந்தத்தோடு நமக்கு எடுத்துக்காட்ட முயற்சியூட்டுவதில் ஆங்கிலக்கல்வியே அளவற்ற உதவிபுரிகின்றது.

இன்னும் ஆங்கிலக்கல்வியின் மகிமையை விளக்குவதற்கு சென்னை வித்தியா இலாகாத்தலைவராகவிருந்த மிஸ்டர் H. B. Grigg அவர்கள் M. S., C. I. E. 1892-வது வருஷத்தில் கான்வகேஷன் அட்ரஸில் கூறிய சில மொழிகளை அப்படியே கூறுகிறேன்.

"The three first universities of India, those of Madras, Bombay and Calcutta, were the immediate out-come of the Educational Despatch of 1856. But the educational conditions of India which that great state paper ought to regulate were due to the labours of many eminent men, statesmen, lawyers, Missionaries and of others, natives of the soil such as Raja Ram Mohan Roy who had been quickened by the first breath of the dawn of western knowledge in India.

All decisive changes in the world take place in the intellect. These men saw that the literature of India, beautiful and varied as it was in the earlier periods of its growth had been reduced to sterility and decay by the idea strangling and cast-iron systems of control elaborated by commentators and grammarians of a later age. They saw that the ancient educational systems of the country were powerless to work a change in the Indian people towards a higher life, and towards material well-being and they strenuously fought for the introduction of a system of education under which the free thoughts and noble intents of the hearts of the peoples of the west might be conveyed on scientific methods to these eastern peoples, seeking thus also to re-invigorate and restore to their proper place in the mind-building of the people their ancient poetry, vedic, epic and dramatic, their books of law and the philosophical speculations of their ages."

Editor's Note:—But Mr. Grigg also wisely thought that there should be instituted separate decrees for those—say women—who study and should always study scientific treatises translated into the vernaculars. C. N. A.

இதன் கருத்து. அநேக ராஜ்யதந்திரிகளும், வக்கீல்களும, பாதிரிகளும், ராஜராம் மோஹனராய் போன்ற இந்திய மாகன்களும் செய்த பெருமுயற்சியின பயனாக, சென்னை, பம்பாய், கலக்கத்தா இம்மூன்றிடங்களில் சர்வகலாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

விவேகத்தின் சக்திப்பெருக்கினாலேயே உலகத்தில் எல்லா மாற்றங்களும் உண்டாகின்றன. இந்திய இலக்கியங்கள் ஆரம்பத்தில் மிகவும் அழகுவாய்ந்தனவும், பலவகைப் பட்டனவும் ஆயிருந்தாலும், பிற்காலத்தவரான உரைகாரர்களுடையவும், இலக்கணசாஸ்திரிகளுடையவும் நிர்ப்பந்தத்தினால் வளர்ச்சியற்று நாளுக்குநாள் பெருமைகுன்றிப்போய்விட்டன.

இந்தியர்களை உயர்தர ஜீவிதத்துக்கு வழிகாட்டவும், லௌகிகச்செல்வங்களை அடையச் செய்யவும் புராதன இந்தியப் படிப்புமுறை சக்தியற்றுவிட்டதென்ற உண்மையை அம்மேதாவிகள் நனகுணர்ந்தார்கள். ஆகையினால் மேனாட்டாரின்சுதந்திரமான நினைவாட்சிகளையும், உத்தமக் கருத்துக்களையும் சாஸ்திரீகமுறைப்படி கீழ்நாட்டாராகிய நமக்கு போதிப்பதற்கான ஒரு நூதன முறையை நடப்பாக்குவதற்காக அவர்கள் வெகு பாடுபட்டார்கள். அந்த நூதன முறைக் கல்வியால் நமது புராதன சாஸ்திரங்களும், இலக்கிய, காவிய ஆராய்ச்சிகளும் விருத்தியடையுமென்பதே அவர்களின் நோக்கமாயிருந்தது.

மேலே சொன்ன மிஸ்டர் Grigg துரையவர்களின் அபிப்பிராயங்கள் எவ்வளவு உண்மையானவையென்று இப்பொழுது நாம் அநுபவத்தால் அறிகின்றோம். ஆங்கிலப்படிப்பினால் சுதேசபாஷைகள் கெட்டுப்போவதாக அநேகர் குறைகூறுகின்றார்கள். ஆனால் உண்மையில் ஆங்கிலப் படிப்பாளிகளாலேயே சுதேசபாஷைகள் விருத்தியடைகின்றன.

திருஷ்டாந்தமாக நமது நாட்டவரான பிரபலர் சுந்தரம் பிள்ளை அவர்கள் எம். எ. யை மட்டும் எடுத்துக்கொண்டால் போதுமானது.

பண்டைக்காலத் தமிழ் வித்வான்களும், கவிகளும் தம்மைப் பற்றிய விருத்தாந்தங்களை தமது நூலில் சிறிதளவேனும் கூறாமல் இருந்ததினால், அவர்களுடைய பிறப்பு, ஜீவித்திருந்தகாலம், இடம் முதலியவைகளைப்பற்றி இப்பொழுது நம்பத்தக்க அத்தாட்சிகள் இல்லாதிருக்கின்றன.

இதனால் நூலாசிரியர்களை அவரவர்கள் மனப்போக்குக்கு இசைந்தவாறு கிறிஸ்து பிறப்பதற்குப் பத்தும், பதினைந்தும் நூற்றாண்டுகள் வரை தள்ளிவருவது நம்மவர்கள் வழக்கமாக இருக்கிறது.

(தொடரும்)

Rudiments of Magnetism and Electricity.

காந்தமும், மின்சாரமும்

ஸ்ரீமாந். M. L. நாராயணய்யரவர்கள், B. A.

நாம் இப்பொழுது கூறப்போவது பெரும்பாலருக்குந் தெரிந்த விஷயமாயினும், இனி, இப்பத்திரிகையின் பின் பிரதிகளில் எழுதுபவனவற்றிற்கு இவை இன்றியமையாதவை.

1. காந்தம். (Magnetism.)

காந்தம் எனப்படுவது ஓர் சக்தி. அதெவ்விதமான சக்தி, யாது காரணம்பற்றி யுண்டாகிறது என்பனவாகிய நுட்ப ஆராய்ச்சிகளுக்கு இது தகுதியான இடமல்ல. யாவரும் அதன் குணங்களைக் கொண்டு அதை நன்கறியலாம். நம்மெல்லோருக்கும் முக்கியமாய்த் தெரிந்த குணமொன்று அதற்குண்டு. அஃதெனவெனில், இரும்பைத்தன் வசமிழுத்தல். சாதாரணமாயக் கடைகளிலோ, அல்லது வர்த்தகசாலைகளிலோ, "காந்தம்" எனப்படும் பொருள் கிரயத்திற்கு அகப்படும். அது இரண்டுவிதமாக விற்கப்படுகிறது. ஒன்று தட்டையாயும் நீளமாயும் (bar magnet) இருக்கும். மற்றொன்று குதிரைக்குளம்பு வடிவமாகவிருக்கும் (Horse-shoe magnet). முதலில் சொன்னதை "நீண்ட காந்த"மெனவும் இரண்டாவது சொன்னதை "வளைந்த காந்த"மென்றுங் கூறுவோம். நீண்டகாந்தத்தின் ஒருதலைப்பில் "N" என்று ஆங்கில எழுத்து வரையப்பட்டிருக்கும். "N" என்பது "நார்த்" —வடதிசை எனப் பொருள்படும் வார்த்தையைக் குறிக்கும். ஒரு பலமான நூலை எடுத்து அக்காந்தத்தின் நடுவில் கட்டி அக்காந்தத்தைத் தொங்கவிட்டால், "N" என்று குறிப்பிட்ட கோடி வடக்குதிசையை நோக்கமாக நிற்கும். காந்தத்தைக் கிழக்கு மேற்காகத் திருப்பினாலும் அது பழையபடி தெற்கு வடக்காகி "N" என்பது வடக்கே நோக்கி நிற்கும். ஒரு சிறு இரும்புத்துண்டை எந்தக்காந்தத்தின் சமீபத்திலாவது கொண்டுபோனால், காந்தம், அதை அதிவேகமாய்த் தன்னிடம் இழுத்துக்கொள்ளும். இக்குணத்தினின்றே "காந்தம் இரும்பையிழுப்பதுபோல்" என்னும் பழமொழியுண்டாயிருக்கிறது. ஒரு காகிதத்தில் கொஞ்சமிரும்புத்தூளை அல்லது அரப்பொடியை வைத்து ஏதாவதொரு காந்தத்தைச் சமீபத்திற் கொண்டுபோனால் இரும்புத்தூள் முழுதும் காந்தத்தில் ஒட்டிக்கொள்ளும். ஆகவே காந்தத்தின் முக்கிய குணங்கள்—1. இரும்பை இழுத்தல். 2. [நீண்ட காந்தம்] திசைகாண்பித்தல்.

இயற்கையில், 'காந்தக்கல்' [Loadstone] என்னுங் காந்தம் சிலவிடங்களில் அகப்படுகிறது. ஆனால் நாம் கடைகளில் வாங்குபவை எல்லாம் செயற்கைக் காந்தமே. ஒரு இரும்புக் கம்பியை மேசையின்மேல் அசையாமல் வைத்துக்கொண்டு ஓர் நீண்ட காந்தத்தை எடுத்து ஏதாவதோர் கோடியினால் ஒரேதிசையிலேயே அக்கம்பியின்மேல் அழுந்தத்தேய்த்தால் அக்கம்பிக்கும் காந்த சக்தியுண்டாகிறது. ஆனால், அச்சக்தி சற்றுநேரத்திற்குத்தான் அதனிடம் தங்கியிருக்கும். பிறகு, இரும்புக்கம்பிக்குப் பதிலாக உருக்குக் கம்பியொன்றை அங்ஙனமே செய்தால் காந்தசக்தி அக்கம்பிக்கு எப்பொழுதுமிருக்கும்படி வேரூன்றிவிடுகிறது.

ஒரு நீண்ட காந்தத்தை நூலினால் கட்டித்தொங்கவிட்டால் தெற்கு வடக்காக விருக்குமென்று கூறினோம். "N" என்னுமெழுத்து வடக்கு நோக்கியேயிருக்கும். அச்சமயத்தில் மற்றொரு நீண்டகாந்தத்தை எடுத்து அதன் "N" என்னும் கோடியை மெதுவாய்த் தொங்கிக்கொண்டிருக்கும் காந்தத்தின் "N" கோடி சமீபத்திற்கொண்டுபோனால் ஊசலாடிக்கொண்டிருக்கும். 'N' கோடியானது இதைக் கண்டதும் தூரே விலகுகிறது. சுவஜாதிமித்ரத்வம் கிடையாது போலும். அதே மாதிரி மற்றொரு கோடியும் ஊசலாடிக்கொண்டிருக்கும் காந்தத்தின் மற்றொரு கோடியை தூரவிரட்டும். 'N' கோடி வடக்கு நோக்கியிருப்பதனால், மற்றொரு கோடி தெற்கு நோக்கித்தானி

ருக்கவேண்டும். அதற்கு 'S' என்று சொல்லுவோம் கையிலிருக்கும் காந்தத்தின் 'N' கோடியை ஊசலாடிக் கொண்டிருக்கும் காந்தத்தின் 'S' கோடியினருகில் கொண்டு போனால் 'S' கோடியானது 'N, கோடியை நோக்கி சமீபமாக வரும். ஆகவே, 'N' கோடிக்கும், 'N' கோடிக்கும் விரோதம். 'S' கோடிக்கும் 'N' கோடிக்கும் நேசம். ஒரே ஜாதியான இரண்டு காந்தங்களுக்குப் பகை, மாறுஜாதியான இரண்டுகாந்தங்களுக்கு சிநேகம், உலகமே யப்படித்தான்!

ரஸாயன சாஸ்திரிகள், இப்பூவுலகமானது ஒரு பெரிய காந்தக்கல்லென்றும், அதற்கு வடதுருவத்திலும், தென்துருவத்திலும், [North Pole and South Pole] நம்முடைய நீண்ட காந்தத்திற்கு உள்ளது போல் காந்தம் அமைக்கப்பட்டிருக்கிறதென்றும் கூறுகிறார்கள். அப்படியாயின், உலகத்தின் வடதிசையிலிருக்கும் காந்தமும், நமது நீண்ட காந்தத்தின் 'N' கோடியிலுள்ள காந்தமும் மாறுஜாதியாக விருக்கின்றன. அதனாற்றான், அவைகளிரண்டிற்கும் நேசம். 'N' கோடி வடக்கேயே பார்த்துக்கொண்டிருக்கிறது. அவ்வண்ணமே 'S' கோடி தெற்கேயே நோக்கிக்கொண்டிருக்கிறது. நீண்ட காந்தத்தின் இக்குணத்தினாற்றான் கப்பல்களில் திசையறியக்கூடாத கடல் நடுவே மாலுமிகள் திசையையறிந்து கொள்ளுகிறார்கள். கப்பலில் திசையறியுங் கருவிக்கு, "மாரினர்ஸ் காம்பஸ் [Mariner's Compass] என்று பெயர். நீண்ட காந்தஊசியொன்று கூர்மையான முனையினால் தாங்கப்பட்டு நாலாபக்கமும் இலகுவாய் திரும்பும்படியாகவிருக்கும். கப்பல் எப்பக்கம் திரும்பினும் ஊசிவடக்கேயே காட்டிநிற்கும். ஊசிக்கடியில், கடிகாரத்தின் கணக்குகள் வரைந்துள்ள தட்டைபோன்ற ஒரு தட்டின் மேல் திசைகள் எழுதப்பட்டிருக்கும். ஊசியானது கப்பல் போகுந்திசையைக் காட்டும்படிக்கு, தட்டில் எழுத்துகள் வரையப்பட்டிருக்கும். அதிலிருந்து கப்பலோட்டிகள் கப்பல் போகும் திக்கை யறிந்து கொள்வார்கள்.

[தொடரும்]

இனிய தமிழ் நாவல்கள்.

			ரூ.	அ.
ரத்தினபுரி ரகசியம்	...	...	3	4
கன்னியின் முத்தம்	...	...	3	0
மாண்டிகிருஸ்டோ	...	...	2	8
சுகுணதீரன்	...	...	2	4
கனகபூஷணம்	...	...	2	0
தனபாலன்	...	...	1	8
ஜடாவல்லவர்	...	...	1	8
நீலா ...	...	...	1	4
கமலசேகரன்	...	...	1	4
வரதசுந்தரம்	...	...	1	0
அந்தப்புரக்காதல்	...	...	1	0
வசீகரி——	...	...	1	0
குணசுந்தரன்	...	...	1	0
விஜயகாருண்யம்	...	...	0	12
அமீர்லி	...	...	0	12
பிரேமகாந்தன்	...	...	0	12
லீலா——	...	...	0	12
மங்கைக்கரசி	...	...	0	12
பத்மலோசனி	...	...	0	12
கோகிலாம்பாள்	...	...	0	12
புஷ்பவனம	...	...	0	10
குணசீலன்	...	...	0	10
ஸரஸா——	...	...	0	10
நீலகண்டன்	...	...	0	10
ராமமூர்த்தி	...	...	0	10
சாரதாம்பாள்	...	...	0	8
வத்ஸலா	...	...	0	8
வனஜாக்ஷி	...	...	0	8
ஜரத்காரு	...	...	0	5
கருணாகரன்	...	...	0	4
கமலாம்பிகை	...	...	0	4
ஸர்தார்ஸிங்	...	...	0	3
(கவீசர் பத்தியம் 2 காபி...		...	0	1)

N. B. மேலேகண்ட புஸ்தகங்களை ஆர்டர் செய்கிறவர்களுக்கு "அமராவதி" என்னும் நாவலும் இனாமாக அனுப்பப்படும். அல்லது அரையணா ஸ்டாம்பு போஸ்டேஜுக்காக அனுப்பினால் அமராவதி இனாமாக போஸ்டில் அனுப்பப்படும்.

எஸ். ஜி. ஐயர் அண்டு கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை. S. E.